1975 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முக்கியமான இடங்களைப்பற்றித்தான் குறிப்பிட்டேன் தவிர எல்லா இடங்களையும் குறிப்பிடவில்லை. ஆவுடையார்கோவிலைப்பற்றியும் சொல்லவில்லை. நான் முக்கியமான இடங்களைத்தான் குறிப்பிட்டேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கால்வாய்களைப் புதுப்பித்தல்.

*436 வினா—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காளிங்கராயன் வாய்க்கால்களை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

The Hon. THIRU P. U. SHANMUGHAM: (a) & (b) Yes. Government have approved of scheme for remodelling of the Kalingarayan channel, and Arakkankottai channel. Remodelling of Thadapalli channel is under consideration.

*437 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி அருகிலுள்ள பழைய காளிங்கராயன் கால்வாயை அபிவிருத்தி செய்திடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. எஸ். கே. சுப்பிரமணியம்: காளிங்கராயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதா? துவக்கப்பட்டுவிட்டால் இதற்காக எவ்வளவு மூலதனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காளிங்கராயன் வாய்க்கால் வேலை துவக்கப்பட்டுவிட்டதாகக் கருதுகிறேன். அதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிற தொகை ரூ. 60 லட்சம். எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இல்லை.